*27*

# இயேசுவின் இரத்தம்

## எபேசியர் 1:7-12

*"இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (எபேசியர் 1:7).*

இயேசுவின் விலை மதிப்பற்ற இரத்தம் பற்றி நாம் குறிப்பாக நினைக்கையில், வேதவசனங்களின் "மகாபரிசுத்த ஸ்தலத்தில்" நாம் பிரவேசிக்கிறோம் என்பதை நாம் அறிவதால், நமது இருதயங்கள் மீது ஒரு "பரிசுத்த அமைதி" கவிழ்கிறது.

இயேசுவின் இரத்தமே வேதாகமத்தின் மையப்பொருளாக உள்ளது! இருந்தபோதிலும், இன்றைய நாட்களில் மக்கள் அவரது இரத்தம் என்பதன் பாடப்பொருளினால் பயமடைகின்றனர். கிறிஸ்தவத்திற்குப் புதிய அடையாளங்கள் தேவை என்றுகூடச் சிலர் உரிமை கோருகின்றனர். அப்படிப்பட்ட ஒரு கண்ணோட்டமானது தேவனுடைய மதிநுட்பம் மற்றும் பண்பு ஆகியவற்றைத் தவறு என்று கூறி எதிர்த்து நிற்கிறது, ஏனெனில் தேவன் தமது குமாரனின் இரத்தத்தை நமது இரட்சிப்புக்கான வழிமுறையாகத் தேர்ந்துகொண்டார்! அவர் தமது ஆட்டுக்குட்டியானவரை எல்லா வரலாற்றின் மையமாக்கினார் (வெளிப்படுத்தின விசேஷம் 13:8). சிலுவைதான் தேவனை நமது பாவங்கள் எவ்வளவாகப் புண்படுத்துகின்றன என்பதை நாம் காணுமிடமாக உள்ளது (யோவான் 3:16). பரலோகத்தின் இறையியல் கிறிஸ்துவை மையங்கொண்டதாக, சிலுவையை மையங் கொண்டதாக, மற்றும் இரத்தத்தை மையங்கொண்டதாக உள்ளது.

### பாவத்தின் பெருங்கொடுமை

வேதாகமத்தில் உள்ள லேவியராகமம் என்ற புத்தகத்தைக் காட்டிலும் அதிக வன்மையாக நவீன சிந்தையுடன் போராடுகிற புத்தகம் வேதாகமத்தில் வேறு எதுவும் இல்லை. "இந்தப் புத்தகம் வேதாகமத்திற்குள் எவ்வாறு வந்தது?" என்று நாம் வியப்படைகிறோம். வேதாகமத்தை நாம் வாசிப்பதில் வழக்கமாக நாம் இதை ஒதுக்கித் தாண்டி வந்து விடுகிறோம். இருப்பினும், இது வேதாகமரீதியான மிகமுக்கியமான புத்தகமாக உள்ளது. இதில்தான் தேவன், மோசேயின் பிரமாணத்தில் உள்ள பலி முறைமை பற்றிய விவரங்களைக் கொடுத்துள்ளார். இது ஆசாரியர்கள், பலிகள் மற்றும் இரத்தம் ஆகியவற்றினால் நிரப்பப்பட்டுள்ளது! நியாயப்பிரமாணத்தின்

*இந்தப் புத்தகத்தில் தேவன், பாவத்தின் மிக அதிகமான பாவம் நிறைந்த தன்மை பற்றிப் போதித்தார் (ரோமர் 7:13). இது, தேவனும் பாவமும் ஒன்றுகலக்க இயலாது என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது.*

*பாவம் தேவனுக்கு முரண்படுகிறது/எதிர்த்து நிற்கிறது! அது கண்டுகொள்ளாமல் விடப்படக்கூடாது. ஒவ்வொரு பாவமும், மனம் வருந்தாத ஒவ்வொரு பாவியும் தண்டிக்கப்படுவர். தெய்வீகக் கட்டளை ஒன்றினால்கூடப் பாவம் தப்புவிக்கப்பட இயலாது - தேவனுடைய நீதி அதைத் தடை செய்கிறது.*

*பாவத்தின் கொடுக்கு மரணத்தின் கொடுக்காக உள்ளது (1 கொரிந்தியர் 15:56). இரத்தம் சிந்துதலினால் மாத்திரமே பாவ மன்னிப்பு உண்டாக முடியும். நியாயப்பிரமாணத்தின்கீழ், பாவமன்னிப்பிற்கு மிருகங்களின் இரத்தம் தேவையாயிருந்தது (எபிரெயர் 9:22). நியாயப்பிரமாணமானது நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்தும் உபாத்தியாயிருந்தது, அவரே பாவத்திற்காக நமது நிறைவான மற்றும் முழுமையான பலியாக இருந்தார் (கலாத்தியர் 3:22-29; ரோமர் 15:4; 1 கொரிந்தியர் 10:11ஐக் காணவும்).*

*காளைகள் மற்றும் வெள்ளாட்டுக்கடாக்களின் இரத்தத்துடனான மோசேயின் பழைய பலிமுறைமை பாவத்தை எடுத்துப்போட இயலாததாக இருந்தது (எபிரெயர் 10:4). அத்துடன் கூடுதலாக, மனிதன் நியாயப்பிரமாணத்தைப் பூரணமாகக் கடைப்பிடிக்க இயலாதிருந்தான் (நடபடகள் 15:8-11), மற்றும் மனிதகுலத்தின் இரத்தம்கூட மனிதனின் குற்றத்திற்கு நிவாரணம் தர இயலாதிருந்தது. மனிதன் தனக்காகச் செய்துகொள்ள இயலாததைத் தேவன் அவனுக்காகச் செய்தார். இராபர்ட் கோல்மேன் என்பவர் வேதவசனங்களில் இரத்தத்தைக் குறிப்பிடும் 460 குறிப்புகளை எண்ணியுள்ளார்.[1] வேதவசனங்களை கவனமாக வாசிக்கிற எவரும், நமது மீட்பிற்காகத் தமது இரத்தத்தை இயேசு சிந்தியதுதான் கிறிஸ்தவத்தின் மையமாக உள்ளது என்ற உண்மையைத் தவறவிட முடி-யாது. இயேசுவின் இரத்தம் எப்போதும் நிறைந்துள்ள "பரலோகத்தின் இரத்தவங்கியை" உருவாக்கியுள்ளது என்பது பரிசுத்த ஆவியானவரின் சாட்சியாகும். வேதவாக்கியங்களின்படி இயேசுவானவர் நமது பாவங் களுக்காக மரித்தார் என்று பவுல் கூறினார் (1 கொரிந்தியர் 15:1-4).*

*குற்றமற்ற இயேசுவின் இரத்தம் நம்மை ஒப்புரவாக்குகிறது (2 கொரிந்தியர் 5:14-21), நம்மைக் கழுவுகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 1:5; 7:14), நம்மை மீட்கிறது (எபேசியர் 1:7; 1 பேதுரு 1:18, 19), நம்மைச் சுத்திகரிக்கிறது (1 யோவான் 1:7), நம்மை நீதிமான்களாக்குகிறது (ரோமர் 5:8, 9), நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறது (எபிரெயர் 10:10; 13:12), நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிறது (1 யோவான் 2:2), நமக்குச் சமாதானம் தருகிறது (எபேசியர் 2:13-16; கொலோசெயர் 1:20), மற்றும் நாம் சாத்தானை வெற்றிகொள்ளக்கூடியவர்கள் ஆக்குகிறது (வெளிப் படுத்தின விசேஷம் 12:11). கிறிஸ்துவின் இரத்தமே நமது பாவங்களுக்கான உண்மையான, வரலாற்றுப்பூர்வமான, முழுமையான மற்றும் கடைசியான விலைசெலுத்துதலாக உள்ளது. யோவானுடன் சேர்ந்து நாம், "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று*

கூறுகிறோம் (யோவான் 1:29, 36).

## அவருடைய இரத்தத்தின் வல்லமை

*அவருடைய இரத்தத்திற்குப் புதிய ஏற்பாட்டில் (அல்லது புதிய உடன்படிக்கையில்; மத்தேயு 26:26-28; 1 கொரிந்தியர் 11:25, 26; எபிரெயர் 13:20) உள்ள இணைப்பில் நாம் அதன் வல்லமையைக் காணுகிறோம்.* புதிய ஏற்பாட்டில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் கிறிஸ்துவின் இரத்தத்தில் நனைந்துள்ளது. நீங்கள் வேதவசனங்களை வாசித்து அதில் கிறிஸ்துவைக் கண்டறியத் தவறும்போது, நீங்கள் அவற்றைத் தவறாக வாசிக்கிறீர்கள். ஆபேலின் இரத்தம் பூமியில் இருந்து தேவனை நோக்கிக் கூப்பிடுகிறது (ஆதியாகமம் 4:2-12; மத்தேயு 23:35; லூக்கா 11:51ஐக் காணவும்). ஆபேலின் இரத்தம் பேசியவற்றைக் காட்டிலும் மேன்மையானவைகளை இயேசுவின் இரத்தம் பேசுகிறது (எபிரெயர் 12:24). இரத்தம் பேசுவதைக் "கவனியுங்கள்" (எபிரெயர் 9:11-22)!

*புதிய ஏற்பாட்டு சபையை உருவாக்குவதில் நாம் அவரது இரத்தத்தின் வல்லமையைக் காணுகிறோம்* (நடபடிகள் 20:28; எபேசியர் 5:25-28). மோசேயின் நியாயப்பிரமாணத்தின்கீழ் பல லட்சக்கணக்கான மிருகங்களும் பறவைகளும் பலிசெலுத்தப்பட்டன, ஆனால் மனிதன் இன்னமும் பாவத்தில் அமிழ்ந்து கிடந்தான். இன்றைய நாட்களில் நாம் அப்படிப்பட்ட ஒரு பிரமாண முறைமையின் கீழ் இராதது பற்றி நீங்கள் மகிழ்வடைவது இல்லையா? மிருகத்தின் இரத்தம் சிலகாலத்திற்கு மாத்திரம், பாவங்களை ஒரு ஆண்டிற்கு முன்னாக உருட்டி விடுவதன்மூலம் [பாவ மன்னிப்பை] வாங்க முடிந்தது. கிறிஸ்துவின் இரத்தம் - சபை என்ற - மகிமையுள்ள ஒரு விஷயத்தை வாங்கிற்று!

இரத்தத்தில் உயிர் இருப்பதாகப் பழைய ஏற்பாடு கூறுகிறது (லேவிய ராகமம் 17:11, 14). நமது பாவங்களிலிருந்து நம்மை விடுவிக்க இயேசு தமது இரத்தத்தைக் கொடுத்தார் (வெளிப்படுத்தின விசேஷம் 1:5). நாம் நித்தியத்திற்கும் அவருடன் வாழ்வதற்காக அவர் பூமியின்மீது நமக்காக மரித்தார் (1 தெசலோனிக்கேயர் 5:10).

சிலபொருட்களின் விலையானது அதன் மதிப்பிலிருந்து வளர் கிறது. இயேசு தமது சொந்த இரத்தத்தைக் கொண்டு சபையைக் கிரயம் செய்ய மனவிருப்பம் கொள்ளும் அளவுக்குத் தமது சபையை மிகவும் மதிப்புள்ளதாகக் கருதினார் (நடபடிகள் 20:28ஐக் காணவும்). உள்ளூர் சபையானது அதன் தவறுகள் யாவற்றுடனும்கூட, இன்னமும் பூமியில் மிகவும் வல்லமையுள்ள குழுவாக உள்ளது! சபையை குறைத்து மதிப்பிடுதல் என்பது இரத்தத்தை பெருமை குலைப்பதாக உள்ளது.

*புதிய ஏற்பாட்டின் இராப்போஜனத்தில் நாம் அவரது இரத்தத்தின் வல்லமையைக் காணுகிறோம்* (நடபடிகள் 2:42; 1 கொரிந்தியர் 10:16-21; 11:24-30). ஒரே வழி, ஒரே சரீரம் (சபை), ஒரே அப்பம், ஒரே இரத்தம் ஒரே இராப்போஜனம் மற்றும் ஒரே ஜீவன் ஆகியவை உள்ளது! இரத்தம் என்பது சிலுவையின் கனியாகவும் எல்லையற்ற வல்லமையாகவும் உள்ளது. கர்த்தருடைய இராப்போஜனம் கிறிஸ்து வரும் வரையில் அவரது

மரணத்தை அறிவிக்கிறது (1 கொரிந்தியர் 11:26).

பிரதான கட்டளையின்படியான ஞானஸ்நானத்தில் நாம் அவரது இரத்தத்தின் வல்லமையைக் காணுகிறோம் (ரோமர் 6:1-5; கலாத்தியர் 3:26, 27; கொலோசெயர் 2:12). யோவான், பூமியின் மீது மூன்று விஷயங்கள் - ஆவி, ஜலம் மற்றும் இரத்தம் ஆகியவை - சாட்சியிடுவதாகக் கூறினார் (1 யோவான் 5:3-8). ஞானஸ்நானத்தில், பாவிகள் சிலுவையின் கிறிஸ்துவால் உடுத்துவிக்கப்படுகின்றனர். அவரது இரத்தமே நாம் பரலோகத்தில் பிரவேசிக்கும் உரிமையை நம்மீது பொழிகிறது.

இரத்தமின்றி, வேதாகமமின்றி, சபையின்றி, கர்த்தருடைய இராப்போஜனமின்றி, ஞானஸ்நானமின்றி இரட்சிப்பை இந்த உலகம் விரும்புகிறது. இது தேவனுடைய திட்டமாக இருப்பதில்லை! இயேசுவின் இரத்தத்தின் மூலமாகவே நமது இரட்சிப்பு வருகிறது!

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*

---

குறிப்பு

[1]Robert Coleman, "The Gospel of Blood" (http://www.preaching.com/preaching/past-issues/robertcoleman.htm; Internet; accessed 1 December 2006).